உ

சிவமயம்



பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும்
நீராவியடியை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் சின்னத்துரை பத்மநாதன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

12.12.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும்

நீராவியடியைப் வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் சின்னத்துரை பத்மநாதன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**12.12.2012**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எங்கள் குடும்ப விருட்சத்தின் வேராக நின்று யாம்
தரணிதனில் தலை நிமிர்ந்து வாழ்வாங்கு வாழத்
தன்னையே உருக்கி ஒடுக்கி எம் வாழ்விற்கு
வழிகாட்டி ஒளியூட்டிச் சீராட்டி பாராட்டி வளர்த்தெடுத்த
எம் தெய்வமே!
இன்று இப்புவியில் யாம் துவண்டு வாடித்
தவிக்க விட்டு இறையடி சேர்ந்த
எங்கள் அன்புத் தந்தையே! எங்கள்
கண்ணீரும் கம்பலையும் ஒன்றாக இணைந்த
நிலையில் இந்த அன்பு மலரைத்
தங்கள் திருவடிக்குச் சமர்ப்பித்து வணங்குகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
22.04.1944

மறைவு
12.11.2012


# அமரர்
# சின்னத்துரை பத்மநாதன்

**"திதி நிர்ணய வெண்பா"**

ஆண்டு நந்தன வருஷ ஐப்பசி மாத
பூண்டதோக மனநிறைவு அபரபக்க சதுர்த்தசி திதியில்
சீர்பரவும் சின்னத்துரை பத்மநாதன் என்னும் நல்லான்
சிவானந்த பேறு பெற்றார் உற்றார் கூடித் தொழ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்
# சின்னத்துரை பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணியுமின் கனிந்து.

## தேவாரம்

நாமார்க்குங் குடி அல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்படடோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணி அறிவோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாம் ஆர்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழை ஓர் காதிற்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்சே வடி இணையே குறுகினோமே

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமுங்
குன்றே அனையாய் என்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
என்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன் பெற்ற
தார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறைவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கினையோனே கதிர்காமப் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னத்துரை பத்மநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்து எனப்படும் இலங்கைத் தீவினிலே யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்விலே சின்னத்துரை - சின்னம்மா தம்பதியினரின் அன்புக்குரிய நான்காவது தவப் புதல்வனாக 1944.04.22 இப்பூவுலகில் பூவாய் மலர்ந்தார்.

இவர் உடன் பிறந்தவர்கள் எண்மர். பரமேஸ்வரி, பரமானந்தம், பாலசுப்பிரமணியம், லீலாவதி, மகேஸ்வரி, அன்னலட்சுமி, கமலாதேவி, பவளராணி ஆகியோர் இவர்களுக்கு இனிய சகோதரனாகவும், சகோதரர்கள் மீது அளவு கடந்த பாசமிக்கவராகவும் விளங்கினார்.

அழகிய தோற்றமும் வசீகரப் புன்னகையும் தன்னகத்தே கொண்டு பார்ப்போரை வசீகரிக்குத் தன்மையும் கொண்டிருந்தார். இவர் தனது இளமைக் கல்வியினை கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் பயின்றார். இருப்பினும் தனது குடும்ப சூழ்நிலையாகக் கருத்திற் கொண்டு கொழும்பிலே வணிக நிலையம் ஒன்றில் பணியாற்றி குடும்ப இன்னல்களைத் துடைத்தார்.

காலச் சக்கரத்தின் வேகத்தில் அவர் திருமண வயதை எட்டவே பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட கொட்டடியைச் சேர்ந்த கந்தையா இரத்தனமணி தம்பதியரின் புத்திரியாகிய சாந்தினி தேவியை கரம் பிடித்துக் கொடுத்தனர்.

பெரியோரின் ஆசீர்வாதத்துடன் நடந்தேறிய இல்லற வாழ்வின் பேறாக அஜெந்தினி, அருந்தினி, அமிழினி, அகிந்தன், அகழ்யன் எனும் ஐந்து பிள்ளைச் செல்வங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983ம் ஆண்டு யூலைக் கலவரத்தில் கொழும்பில் இவரது உடமைகள் அனைத்தும் எரிக்கப்பட்டு மயிரிழையில் உயிர் பிழைத்து மீண்டும் யாழ்ப்பாணம் வந்து புதுப்பொலிவோடு தனது தொழிலை ஆரம்பித்தார்.

பிள்ளைகள் வளர்ப்பதில் மட்டும் நின்றுவிடாது அவர்களின் கல்விக்காகவே தன் உழைப்பு முழுவதையும் அர்ப்பணித்து அஜெந்தினி ஆங்கில ஆசிரியையாகவும், அகழ்யன் யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவ பீட மாணவனாகவும் அருந்தினி, அமிழினி, அகிந்தன் ஆகியோர் தமது உயர் கல்வியினைப் பூர்த்தி செய்து கொண்டதோடு வேலைவாய்ப்பினையும் பெற்றுக் கொண்டு தந்தையின் அயராத உழைப்புக்கு சிரம் தாழ்த்தி நன்றி செலுத்தினர். இதனைக் கண்டு பெருமிதம் கொண்டதோடு மகிழ்ச்சியும் அடைந்தார்.

பின்னர் தனது மூத்த மகள் அஜெந்தினிக்கும், இரண்டாவது மகள் அருந்தினிக்கும் தனது தங்கையின் பிள்ளைகளான சுதாகரன், மோகன் (விக்னா ஹோட்டல்) ஆகியோரையும், தனது மூன்றாவது மகள் அமிழினிக்கு ஜெயந்திரன் (விவேகானந்த அச்சக உரிமையாளர்) என்பவரையும் கரம் பிடித்துக் கொடுத்தார்.

இதன் பலனாக ருக்ஷிகா, லுகேஷ்காந், ஸேனுகான், ஹர்னிஜா, அபிராம் ஆகிய பேரன், பேர்த்திகளைக் கண்டு அகமகிழ்ந்தார்.

இவ்வாறாக இன்ப வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த வேளையில் என்ன புண்ணியத் செய்தார் எனும் படியாக 12.11.2012 திங்கட்கிழமை மாலை வேளை தான் பூவுலகை விட்டு அகலப் போவதை அறியாமலே மரண வேதனை ஏதும் இல்லாமலே துயில் வது போல் ஒரு மயக்கத்திலேயே அவர் மீளாத் துயிலில் ஆழ்ந்து சிவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் ஆற்றாமை

குடும்பத்தின் குலவிளக்கே
இறுதி மூச்சுவரை எம்மைப்
பணி செய்து சீர்தூக்கி காத்தவரே
அன்பான வார்த்தைகள் கூறி
என்னுடன் இனிதே இல்லறம் புரிந்தவரே
எம் ஐந்து செல்வங்களையும்
கல்வியில் சிறக்க வைத்தவரே
உங்களது இனிய பண்பால்
உறவினருடன் நல்வழி நடந்தவரே

என்னைக் கைப்பிடித்த நாள் முதலாய் எனக்கு துணையாய் நின்று காத்து வந்தவரே. உரம் கொண்ட நெஞ்சுடன் உறுதி உடன் இறுதி வரை உழைத்தவரே சிரம் தாழ்த்தி வணங்கும் தெய்வமாய் எனக்கு இருந்தவரே. பரம்பொருளின் அழைப்புப் பெற்றா என்னைப் பிரிந்தீர். எண்ணில் அடங்கா துயரளித்து என்னை விட்டு ஏன் சென்றீர். தேசமதில் தனிமரமாய் தேம்பி அழும் நினைக்களா னேன். பூம்போன்ற மனதை உடைய என் துணைவரே பூவாக இறைவன் பாதம் சென்றடைந்தீரோ. உங்கள் நினைவில் என் றென்றும் கண்ணீரில் வாடும்......

உங்கள் அன்பு
மனைவி
சயந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து செல்வங்களின் ஆற்றாமை

அப்பா! அப்பா! அப்பா! எம்மை விட்டு எங்கு சென்றீரோ உங்களை கண்ணெதிரே காணாமல் எங்கும் தேடி அலைகின்றோம். உங்கள் முகத்தைக் காணவில்லையே!

சிரிக்க வைக்கும் பேச்சும் உங்கள் சிரித்த முகமும் நித்தமும் எம் கண் முன்னே வந்து செல்கின்றதே. எமது நினைவு தெரிந்த நாள் முதல் எமக்காய் உம்மை முழுமையாய் அர்ப்பணித்து எவ்வளவு துன்பம் வந்தாலும் எம்மை அன்புடனும் இனிய வார்த்தைகள் பேசியும் எம்மை வளர்த்தவரே! எம்மைக் கல்வியில் உயர்த்த எமக்கு நல்வழி காட்டி வைத்த அப்பாவே!

நீங்கள் தான் எப்போதும் வேண்டும் அப்பா! யாரை இனி நாம் அப்பா என்று அழைப்போம். எமக்குச் சொல்லாமல் எங்களைவிட்டு விலகிச் சென்றதை நினைக்க நெஞ்சம் வெடிப்பது போல் இருக்கிறதே. நம் உயிர் உள்ள வரை உங்கள் நினைவை எம் மனதில் பிரார்த்திப்போம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் உங்கள் அன்பச் செல்வங்கள்.

"இழப்புக்கள் என்றும் தவிர்க்க முடியாதவை
ஆனால் சில இழப்புக்கள் என்றும் மறக்க முடியாதவை.

**உங்கள் அன்புப் பிள்ளைகள்**
**அஜெந்தினி, அருந்தினி,**
**அமிழினி, அகிந்தன். அகழ்யன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

எங்கள் அன்பு மாமாவே
தம்பி தம்பி என்று உரிமையுடன்
எங்களை அழைப்பீர்களே!
தம்பி என்ற உங்கள் இனிய
வார்த்தையை இனி நாம் எங்கு
கேட்பது
உங்கள் இனிய சிரிப்பும்
உங்கள் ஆசை முகமும்
என்றும் எங்களை விட்டு நீங்காது
உங்கள் ஆத்ம சாந்தி
அடையப் பிரார்த்திக்கும்
அன்பு மருமக்கள்

உங்கள் மருமக்கள்
மோகன், சுதாகரன், ஜெயந்திரன்

## பேரப்பிள்ளைகளின் புலம்பல்

எங்கள் இனிய ஐயாவே!
எம்மைக் காண்பதற்காக ஆசையுடன்
சொக்லேற், பிஸ்கட் கொண்டு வருவீர்களே
நாங்கள் உங்கள் கடைக்கு
வரும்போது முறுக்கு, சோடா எல்லாம் தருவீர்களே!
இனி எப்போது ஐயா உங்களைக் காண்போம்
உங்கள் அன்பை இனி யாரிடம் எதிர்பார்ப்போம்
உங்கள் அன்பிற்காக ஏங்கித் தவிக்கும்

உங்கள் அன்பின் பேரப்பிள்ளைகள்
ருக்ஷிகா, ஷோனுகான், [illegible]ஷிகாத்
ஹர்ஷினிஜா, அ[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்புகின்றோம்

அன்புடன் பாசமழை பொழிந்து எம்முடன் வாழ்ந்தவரே
ஆருயிர் மக்களைப் பிரிந்து சடுதியில் ஏன் சென்றீர்
இறைவன் தமக்குத் தேவையென உம்மை ஏற்றுவிட்டார்
ஈசன் நிழலில் நீர் வாழ்ந்திட வேண்டுகின்றோம்
உற்றார் உறவினர் கதறியழ வெகுதூரம் சென்றுவிட்டீர்
என்றும் உம் நினைவு உம்மை விட்டு நீங்காது
ஏங்கித் தவிக்கும் எம் நிலையை நீர் அறிவீரா

**உங்கள் பிரிவால் வாடும்**
**சகோதரர்கள், சகோதரிகள்**
**மச்சான்மார், மச்சாள்மார்**

## ஆறுமா..... இத்துயர்

மாமா நீங்கள் ஐந்து பிள்ளை பெற்றாலும் நாம்
கூட உன் பிள்ளையே என்றாய்
நிறைவான மாமா எமக்குள்ளார் என்று
நாம் நினைத்த வேளை - எமைப் பிரிந்து சென்றீரே
உங்களுக்காக நாம் எல்லோரும் சேர்ந்து
ஆத்ம அஞ்சலி செய்வோமே

**பிரிவால் வாடும்**
**விக்னா குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்



## காப்பு

அமரரிடர் தீர அமபரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மையல் நடஞ் செயும் மயில்வாகனனார்
கையில் வேலாலெனைக் காக்வென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற!
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந் தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகம் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன் மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்ப ட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இரு தொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொக மொக மொக மொக மொக மொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வா!
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடி புனை நெற்றியைப் புனித வேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம் பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண்குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணை வேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் காக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர் வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனைமயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ்ச சனமும் ஒருவழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்விட் டலறி மதிகெட்டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கை, கால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பனகச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலைநோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைசல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகலொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனிய வேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன் பதம் பெறவே உன் அருளாக
அன்புட னிரஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத் தாகவேலாயுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென்றன் பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்ற டியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையும் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடனொரு நினைவது வாகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்ப வர்கள்
ஒரு நாள் முப்பத் தாற உருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீ றணி
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசை மன்ன ரெண்மரத் சேர்ந்தங்க ருளுவஉ
மாற்றலரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்தநாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரை பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கர ரத்தடி
அறிந் தெனதுள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணவாக
சூரபத் மாவை துணிந்தகை யதனால்
இருபத் தேள்வர் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலாவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சிப் புனையும் வேளே போற்றி
உயர்திரு கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

(கந்த சஷ்டி கவசம் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரி காப்பு

விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அளிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீநோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப்புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்ல வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தூயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்துஅணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்கள் கோள்கலெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்தடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லக் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்ளெல்லாம் ஏற்றிஎமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கினையே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநோத உயிரினங்கள்

1. அதிக நீர் அருந்தும் பறவை - புறா
2. மிகச் சிறிய முட்டையிடும் பறவை - தேன்சிட்டு
3. சத்தமிடாத விலங்கு - ஒட்டகச்சிவிங்கி
4. ஞாபகசக்தி கூடிய விலங்கு - யானை
5. நீல நிற இரத்தத்தை உடைய கடல் உயிரினங்கள் - நண்டு, இறால்
6. கடல் நீரைப் பருகும் ஒரேயொரு பறவை - பென்குயின்
7. பல்லில்லாத முலையூட்டி - தேவாங்கு
8. நீந்தத் தெரியாத விலங்கு - ஒட்டகம்
9. பித்தப்பை இல்லாத முலையூட்டி - எலி
10. நாக்கு இல்லாத ஊர்வன - முதலை

## மருத்துவம்

- குருதி வகைகள் - A, B, AB, O
- அறுவை சிகிச்சையின்போது உடல் விறைக்கப் பயன்படுத்துவது - ஈதர்
- காச நோய்க்குரிய தடுப்பு மருந்து - BCG
- எலியால் உண்டாகும் நோய் - எலிக்காய்ச்சல்
- மனித உடலின் மிக நீண்ட எலும்பு - தொடை எலும்பு
- பென்சிலின் எனும் மருந்து தயாரிக்கப்படும் தாவரம் - பெனிசிலியம்

## விண்வெளி

முதன் முதலில் விண்வெளியில் சுற்றியோர்

1. யூரிககாரின் - ரஷ்யா
2. ஜேர்மன் ஸ்டெபனொச் - ரஷ்யா
3. ஜோன் ஹார்பல் கிளேன் - அமெரிக்கா
4. மெல்கம ஸ்கொட் காடென்டர் - அமெரிக்கா
5. அட்ரியன் நிக்கலொச் - ரஷ்யா
6. பவல் ரோமானுவிச் பொபோவிச் - ரஷ்யா
7. வால்பர் மார்ட் ஸ்வீரா - அமெரிக்கா
8. வெலரீ பய்கொஸ்கி - ரஷ்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Geographical Epithts

1. *Gate way of India* - *Bombay*
2. *Huma Equator of the Earth* - *The Himalayas*
3. *Pearl of the Indain Ocean* - *Sri Lanka*
4. *Yellow River* - *The river Hwang Ho*
5. *Roof of the world* - *The Pamirs*
6. *Land of the Rising Sun* - *Japan*
7. *Playground of Europe* - *Switzerland*
8. *Land of Marble* - *Canada*
9. *Land of the midnight Sun* - *Norway*
10. *Gift of the Nile* - *Egypt*

## The Superlatives in Things

1. *Largest Country* - *Brazil (America)*
2. *Largest City* - *London (England)*
3. *Largest desert* - *Sahara (Africa)*
4. *Longest Corider* - *Rameswaram Temple (India)*
5. *Largest Island* - *Greenland*
6. *Highest Mountain Peak* - *The Everest (India)*
7. *Largest Ocean* - *The Pacific*
8. *Biggest Museum* - *British Museum (London)*
9. *Largest Planet* - *Jupiter*
10. *Highest Tower* - *Eiffel Tower (France)*
11. *Longest Wall* - *The Greaf wall of China*
12. *Biggest Waterfall* - *Venezuela*
13. *Biggest Statue* - *Statue of Liberty (Newyork)*
14. *Largest Continent* - *Asia*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Geographical Epithts

1. *An album of pictures*
2. *A bevy of girls*
3. *A bouquet of flowers*
4. *A brood of chickens*
5. *A bunch of fruits*
6. *A century of years*
7. *A cluster of stars*
8. *A fleet of ships*
9. *A hive of bees*
10. *A school of whales*
11. *A shoal of fish*
12. *A troop of soldiers*
13. *A range of mountains*
14. *A pencil of rays*
15. *A hoard of money*
16. *A crew of sailors*
17. *A chair of singers*
18. *A lock of hair*
19. *A team of players*
20. *A flight of birds*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thoughts for the Humans

***Man***

*If a man speaks toomuch he is talkative.*

*If he speaks too little he is reserved.*

*If he spends too much he is a spend thrift.*

*If he spends too little he is a miser.*

*If he advance too much he is wayward.*

*If he lags behind he is laggard.*

*If he is sists too much he is obstinate.*

*If he is sists too little he is fickle.*

*If he is accommodating he makes himself cheap.*

*If he remains stiff he is proud*

- *It is not how much we do,*
  *but how much love we put in the doing*
  *It is not how much we give,*
  *but how much love we put in the giving.*

- *The strongest man in the world is he, who stands most alone.*
- *Nothing greaf is ever achieved without enthusiasm.*
- *Arise, awake, sleep no more and stop not till the goal is reached.*
- *Most powerful is he who has himself in his own power.*
- *I'm not afarid of storms, for I'm learning to sail my ship.*
- *All power within you, you can do anything and every thing.*
  *Belive in that,*
  *donot believe that you are weak.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

சின்னத்துரை + சின்னம்மா ↓

- பத்மநாதன்
- பத்மானந்தம் + பிச்சேஸ்வரி
- * பரமேஸ்வரி + வேலாயுதம்
- பாலசுப்பிரமணியம் + விமலா
- லீலா + குணரட்ணம்
- மகேஸ்வரி + அன்ரன்
- அன்னலட்சுமி + *ராசு
- கமலாதேவி + *மகேஸ்வரன்
- பவளராணி + ராஜன்

கந்தையா + இரத்தினமணி ↓


- சாந்தினிதேவி

பத்மநாதன் + சாந்தினிதேவி →

- அஜெந்தினி + சுதாகரன்
  - லேனுகான்
  - ஹார்விஜா
- அருந்தினி + மோகன்
  - ருக்ஷிகா
  - லுகேஷ்காந்
- அமிழினி + ஜெயந்திரன்
  - அபிராம்
- அகிந்தன்
- அகழ்யன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றிகள் என்றென்றும்

எமது குடும்ப தலைவரின் பிரிவுச் செய்தி கேட்டு
கலங்கிய நெஞ்சங்களுக்கும் உடன் ஓடிவந்து உதவி
புரிந்த அயலவர்களுக்கும் உறவினர், நண்பர்கள்
அனைவருக்கும் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல்
அளித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்களுக்கும்
மற்றும் துக்கத்தில் பங்கெடுத்த அனைவருக்கும்,
மலர்வளையம் வைத்தவர்களுக்கும் இன்றைய
ஆத்மசாந்தி வைபவத்திலும் மதிய போசனத்திலும்
கலந்து கொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும்
மற்றும் இந்த மலரினை அச்சிட்டு வெளியிட்ட
விவேகானந்தா அச்சகத்தினருக்கும் மற்றும்
எல்லோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்வதுடன் எம் குலவிளக்கின் ஆத்மசாந்தியடைய
எல்லா வல்ல இறைவனின் பாதார விந்தங்களை
வேண்டி இறைஞ்சுகின்றோம்



நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org